மருத்துவக் கல்விக்கான நீட் தேர்வு என்பது தகுதி, திறமையின் அடையாளமா? ஊழலின் ஊற்றுக் கண்ணா?

# மே 16 தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம்! உரிமையுடன் அழைக்கிறோம் - ஒத்த கருத்துடையோரே ஓரணியில் திரள்வீர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 14-

இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவக் கல்விக்கான தகுதித் தேர்வு என்ற பெயரில், நீட் என்ற தேர்வைத் திணித்து கடந்த 10 ஆண்டுகளில் பல நூறு உயிர்கள் பலியாகியுள்ளன. பல்லாயிரக் கணக்கான ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்விக் கனவு பறிக்கப்பட்டது. ஆனால், அதன் உண்மை முகம் அநீதியானது என்பது தொடர்ந்து அம்பலப்பட்டுக் கொண்டே வந்தது.

தமிழ்நாடு முதலில் எச்சரிக்கை செய்தபோது வேடிக்கை பார்த்த பிற மாநிலங்கள் இன்று தான் விழிப்படைந்திருக்கின்றன.

நீட் தேர்வு என்பது, அதைக் கட்டாயப்படுத்திய பா.ஜ.க. அரசு சொன்னது போல, தகுதி திறமையின் அடையாளம் அல்ல; ஊழலின் ஊற்றுக் கண் என்பதற்கு 10 ஆண்டுகளில் 89 முறை வினாத்தாள் கசிவுகள், 48 முறை மறு தேர்வுகள் நடந்துள்ளன என்பதே சான்று அல்லவா? இது கார்ப்பரேட்டுகள் கொழிக்க செய்யப்பட்ட ஏற்பாடு என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே! உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர் அபிஷேக் சிங்வி நீட் என்பது தேர்வு அல்ல; இது ஏலமாக மாறி வருகிறது என்று தெரிவித்துள்ளாரே!

இந்த முறைகேடுகள் நடந்ததை ஒப்புக் கொண்டு ஒன்றிய அரசு இந்த ஆண்டு மே3 அன்று நடைபெற்ற நீட் தேர்வை ரத்து செய்துள்ளது. 22 லட்சம் மாணவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர். ரத்து செய்யப்பட வேண்டியது இந்த ஒரு நாள் நடந்த நீட் தேர்வு அல்ல; ஒட்டுமொத்தமாகவே "நீட் தேர்வு" ரத்து செய்யப்பட வேண்டும். மருத்துவக் கல்வி நுழைவுக்கு அந்தந்த மாநிலங்கள் தேர்ந்தெடுக்கும் முறையே அரசியலமைப்புச் சட்டப்படியானது.

மாணவர் உரிமை காக்க, மாநில உரிமை காக்க, அரசியலமைப்புச் சட்டத் திரிபுவாதத்தைத் தடுக்க "இந்தியா முழுமையும் நீட் தேர்வையே முற்றாக ரத்து செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தி, திராவிடர் கழகத்தின் சார்பில் மே 16 சனிக்கிழமை காலையில் தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பொது நோக்கத்துக்காக உரிமையுடன் அழைக்கிறது திராவிடர் கழகம் ஒத்த கருத்துள்ளோர் ஓரணியில் திரள வேண்டுகிறோம்! கழகத் தோழர்களே, களத்திற்கு வாரீர்! உடனடியாக ஆர்ப்பாட்டப் பணிகளைத் தொடங்குவீர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவித்துள்ளார்.

## கேள்விக் கென்ன பதில்?

**கேள்வி:** முதல்வர் விஜய், எதிர்க்கட்சித் தலைவர்களை நேரில் சென்று சந்தித்ததை, 1967ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் செயலோடு சிலர் ஒப்பிடுகிறார்களே ?

**பதில்:** அண்ணா அவர்களின் செயல் முதிர்ச்சியான அரசியல் பண்பாட்டிற்கும், கண்ணியத்திற்குமான அடையாளம்.

தற்போது முதல்வர் விஜய் செய்திருப்பது, 'அரசியல் தேவை'க்கான அடையாளம்.

# முதலமைச்சர் அரசியல் பிரிவு அலுவலர் நியமனத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வலியுறுத்தல்!

சென்னை, மே 14-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடறிந்த பிரபல ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல், தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் அரசியல் பிரிவு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டிப்பது வியப்பளிக்கிறது. தமிழக வெற்றிக் கழகம், தனது முகப்பு பதாகையில் மதச்சார்பின்மை, சமூகநீதி ஆகியவற்றை முன்னிலைப் படுத்தி, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" குறட்பாவை கொள்கை நிலையாக அறிவித்துள்ளது.

முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்கள் ஆன்மீக வழியில்லாமல் கடவுள் மீதும், வழிபாடுகள் மீதும் நம்பிக்கை கொண்டவராக இருக்கலாம்; அது, அவரது தனிப்பட்ட வாழ்க்கை முறையாகும். ஆனால், மதச்சார்பின்மை பண்புகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அரசு எந்த மதச்சார்பு அடையாளத்தையும் கொண்டிருக்கக் கூடாது என்பது நாடு பின்பற்றி வரும் மரபாகும்.

அறிவியல் கண்ணோட்டமும், பகுத்தறிவு சிந்தனையும் வளர்த்து, வலிமைப்படுத்த வேண்டிய அரசு, முதலமைச்சரின் அரசியல் பிரிவு அலுவலராக ஜோதிடர் ஒருவரை நியமித்திருப்பது சரியல்ல.

இது பொதுமக்களிடம் தவறான நம்பிக்கைகளை ஊக்கப்படுத்துவதாவே அமையும் என்பதால், ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை மறுபரிசீலனை செய்து, ரத்து செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் மு.வீரபாண்டியன் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் வழக்கை மறைத்ததாக சேலம் மேற்கு தொகுதி

# த.வெ.க. எம்.எல்.ஏ. லட்சுமணனை தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் மனு!

சென்னை, மே.14-

ஊழல் வழக்கை மறைத்து சேலம் மேற்கு தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. லட்சுமணனை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் மனு அளித்துள்ளார்.

சேலம் மேற்கு தொகுதியில் வெற்றி பெற்றுள்ள தவெக வேட்பாளர் எஸ்.லக்ஷ்மணன் தனது வேட்பு மனு மற்றும் பிரமாணப் பத்திரத்தில் முக்கிய தகவல்களை மறைத்துள்ளதால் அவரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆளுநரிடம் சுயேட்சை வேட்பாளர் சி.மனோகர் மனு அளித்துள்ளார்.

அவரது மனுவில், தவெக வேட்பாளர் லட்சுமணன் தன்மீது நிலுவையில் இருந்த ஊழல் மற்றும் 'கட்டப்பஞ்சாயத்து' தொடர்பான துறை ரீதியான நடவடிக்கைகளை வேட்பு மனுவில் முழுமையாக தெரிவிக்கவில்லை. அவருக்கு எதிரான விசாரணையில் "நிரூபிக்கப்படவில்லை" என்ற அறிக்கையை தமிழ்நாடு அரசு ஏற்காமல் அவர் ஊழல் செய்திருக்கிறார் என்று கருத்துகளைப் பதிவுசெய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுபோன்ற சூழலில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில் அவர் தகுதி இழந்தவராக அறிவிக்கப்பட வேண்டும். இதுகுறித்து ஆளுநர் உரிய விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுத்து அவரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

சமாஜ்வாடி கட்சித் தலைவர்

# அகிலேஷ் யாதவ் சகோதரர் பிரதீக் யாதவ் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே.14-

சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் அவர்களின் சகோதரர் பிரதீக் யாதவ் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில், சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் சகோதரர் பிரதீக் யாதவ் மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும், இத்தகைய கடுமையான வேதனை மிக்க தருணத்தில் ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் அகிலேஷ் யாதவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, இம்மாபெரும் இழப்பை தாங்கிக் கொள்ளும் வலிமையை அவர்கள் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'இதுபோன்ற சோதனையான நேரங்களில் நாங்கள் எப்போதும் அவருடன் இருப்போம்' என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

கோடை விடுமுறை – வார இறுதி நாட்களை முன்னிட்டு

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சிறப்பு பேருந்துகள்!

## மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, மே.14-

கோடை விடுமுறை, முகூர்த்தம் மற்றும் வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கம் - அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல் வருமாறு :-

14-05-2026 (வியாழக்கிழமை முகூர்த்தம்) 15-05-2026 (வெள்ளிக்கிழமை) 16-05-2026 (சனிக்கிழமை), மற்றும் 17-05-2026 (ஞாயிற்றுக்கிழமை) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 14-05-2026 வியாழக்கிழமை அன்று 80 பேருந்துகளும் 15-05-2026 வெள்ளிக்கிழமை அன்று 620 பேருந்துகளும், 16-05-2026 சனிக்கிழமை அன்று 655 பேருந்துகளும் சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 15-05-2026 மற்றும் 16-05-2026 ஆகிய நாட்களில் 120 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 15-05-2026 மற்றும் 16-05-2026 ஆகிய நாட்களில் 25 பேருந்துகளும் மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வியாழக்கிழமை அன்று 5676 பயணிகளும் வெள்ளிக்கிழமை அன்று 10853 பயணிகளும் சனிக்கிழமை அன்று 8421 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று 9759 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

த.வெ.க. அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில்

# வெற்றிபெற குதிரை பேரம் நடந்துள்ளது!

## பேரவையில் பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு!



சென்னை, மே.14-

தனிப்பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற குதிரைபேரம் நடந்துள்ளதாக தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார். ஜோதிடரை முதலமைச்சர் விஜயின் சிறப்பு அதிகாரியாக நியமித்தது ஏன்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

**முகத்தை மூடிக்கொண்டு வந்தவர் யார்?**

தனிப்பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு, நம்பிக்கை வாக்கெடுப்பில் பேசிய விருத்தாசலம் தொகுதி தே.மு.தி.க. எம்.எல்.ஏ. பிரேமலதா விஜய காந்த், தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், தற்போது குதிரை பேரம் நடந்துள்ளது வேதனையளிப்பதாக விமர்சித்தார்.

முதலமைச்சர் விஜயை சந்திக்க முகத்தை மூடிக் கொண்டு வந்தவர் யார்? எனவும் பிரேமலதா கேள்வி எழுப்பினார்.

# சிறுத்தை தாக்கி யானை பலி!

பாலக்காடு,மே.14-

மலப்புரம் அருகே சிறுத்தை தாக்கி பெண் யானை உயிரிழந்தது. கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் நிலம்பூர் அருகே கேரள- தமிழக எல்லை நாடுக்காணி மலைப்பாதையில் சுமார் 10 வயதுடைய பெண் காட்டு யானை காயங்களுடன் இறந்து கிடந்தது. இதனை நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வனத்துறையினர் பார்த்தனர். இதையடுத்து அவர்கள் ஆய்வு செய்த போது, யானையை சிறுத்தை தாக்கியதில் உயிரிழந்ததும், உடலின் பல பாகங்களை சிறுத்தை தின்றுள்ளதும் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து வனத்துறை காவலர்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர். அப்பகுதிக்கு வந்த நிலம்பூர் வனத்துறை கால்நடை மருத்துவர் ஷியாம் மற்றும் அதிகாரிகள் விசாரணை செய்தனர். தொடர்ந்து யானை சடலத்தை உடற்கூறு பரிசோதனை செய்யப்பட்டது. இதையடுத்து அடர்ந்த வனப் பகுதிக்குள் யானை உடலை அடக்கம் செய்தனர்.



நாமக்கல் மாவட்ட இராசிபுரம் தொகுதி விடுதலைத் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளரும் வழக்கறிஞருமான மகேந்திரன் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். அவரது மறைவுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, மறைந்த வழக்கறிஞர் மகேந்திரன் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளரும் துணை மேயருமான செ.பூபதி, பட்டணம் பேரூர் கழக செயலாளர் பொன். நல்லதம்பி, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.ஜெயபிரகாஷ், சார்பு அணி அமைப்பாளர்கள் பொன்.சித்தார்த், ராஜவேல், முரளி, வார்டு செயலாளர் ஆனந்த், மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வி.சி.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகர தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தல்!

# செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார்!

## நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமை!




திண்டிவனம், மே 14-

திண்டிவனம் நகர தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார். நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமை தாங்கினார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோடை வெயிலை முன்னிட்டு பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் நீர்மோர் பந்தல் அமைக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் கோடை வெயிலை முன்னிட்டு நீர் மோர் பந்தல்அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர தி.மு.க. சார்பில் திண்டிவனம் மேம்பாலம் அருகில் பொது மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகர கழக செயலாளர்ஆசிரியர் கண்ணன் தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், வெள்ளரிக்காய்,கூல் ட்ரிங்க்ஸ் ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி, பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே.பி. ரமேஷ், நகர துணைச் செயலாளர் கௌதமன், நகர மன்ற உறுப்பினர் பாஸ்கரன், நிர்வாகிகள் ஆடிட்டர் பிரகாஷ், சூரிய பிரகாஷ், ரஷீத்கான், டாக்டர் அசோக், முன்னாள் துணைச் செயலாளர் அசோக்குமார், சுவை நடராஜ், ஆறுமுகம், சுந்தரமூர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வெங்கடேச பெருமாள், மல்லிப்பூ ராஜேஷ், துரை, சுரேஷ், லூர்துசாமி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் சஞ்சய் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.